# யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

## முதலாம் தவணை மதிப்பீட்டுப் பரீட்சை - 2022

| தரம் - 7 | செயன்முறைத் தொழினுட்பத்திறன் | நேரம் :- 2 மணித்தியாலம் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..................................................................................

**பகுதி I**

**∗ சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. நேரடியாக தோட்டத்தில் நாட்டக்கூடிய தாவரங்களுள் சரியானது
 1. கத்தரி 2. மிளகாய் 3. வெண்டி 4. தக்காளி

02. பின்வருவனவற்றுள் சிதைவடையக்கூடிய கழிவுப்பொருட்கள்.
 1. பொலித்தீன 2. பிளாஸ்ரிக் 3. தேங்காய்ப்பூ 4. சிரட்டை

03. தடையை அளக்கும் அலகு எது?
 1. வோல்ற் 2. அம்பியர் 3. ஓம் 4. வீச்சு

04. சில வழங்குநர்கள் நியாயமற்ற முறையில் பிழையான செயற்பாடுகளினூடாக இலாபத்தை ஈட்டுவதற்கு மேற்கொள்ளும் வழிகள்.
 1. சந்தை திட்டமிடல் எனப்படும் 2. சந்தை இடைவெளி எனப்படும்
 3. சந்தை மோசடி எனப்படும் 4. சந்தை இலாபவழி எனப்படும்

05. இஞ்சி மஞ்சள் போன்றவற்றில் புதிய தாவரமொன்றை உருவாக்குவதற்கு பயன்படுத்தப்படுவது.
 1. நிலக்கீழ்த் தண்டுத்துண்டம் 2. இலைத்துண்டங்கள்
 3. வித்துக்கள் 4. வன்வைரத்துண்டம்

06. கோவா, சலாது போன்ற இலை வகைகளை கழுவிய பின் நீரை வடிய விட பயன்படுத்தப்படும் உபகரணம்.
 1. கிறேற்றர் 2. வடிதட்டு 3. கொலண்டர் 4 பீலர்

07. எளிய மின் சுற்றொன்றை நிர்மாணிப்பதற்கு பயன்படுத்தப்படும் கணனி மென்பொருள்
 1. MS word 2. Auto CAD 3. Free CAD 4. V – Lab Electricity

08. மிளகுடன் கலப்படம் செய்யக்கூடிய ஒரு பொருள்.
 1. கடுகு 2. கௌபி 3 பயற்றம் வித்து 2. பப்பாசிவித்து

09. மின்மோட்டர் ஒன்றிற்கு உலர் மின்கலங்களின் முனைவுகளை மாற்றி மின்னோட்டத்தை வழங்கினால் யாது நிகழும்.
 1. மோட்டார் இயங்காது 2. இரு திசையும் மாறி மாறி சுற்றும்
 3. ஏற்கனவே சூழன்ற திசையில் சுற்றும் 4.சுழன்ற திசைக்கு எதிர்த்திசையில் சுற்றும்

10. மழை நீரினால் மண்ணின் வளமான மேற்படை கழுவி அகற்றப்படல் எவ்வாறு அழைக்கப்படும்.
 1. மண்ணரிப்பு 2. மண்சரிவு 3. மண்வளமடைதல் 4. நீர்வடிப்பு



kalvi.lk

**11 – 15 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்து எழுதுக.**

**பீலர், இலத்திரனியல் அட்டை, இருவளி ஆளி, கொள்ளளவி, வளம்**

11. மின்னை தற்காலிகமாக சேமித்து வைப்பது ……………………….. ஆகும்.

12. மோட்டார் வாகனங்களின் சமிக்ஞை விளக்குகளை கட்டுப்படுத்துவது ………………………….. ஆகும்.

13. அண்மைக்காலமாக அனேக விற்பனை நிலையங்களில் பணக் கொடுக்கல் வாங்கல் செய்ய பயன்படுத்தப்படுவது …………………………. ஆகும்.

14. கழிவுப்பொருட்கள் வேறாக்கப்பட்டிருப்பின் அது …………………… எனப்படும்.

15. காய் கறிகளின் மேற்றோலை நீக்க ………………………… பயன்படும்.

16 – 20 வரையான வினாக்களுக்கு சரி பிழை இடுக.

16. இலங்கை தரக்கட்டளைகள் பணியகத்தால் வழங்கப்படும் தரச்சான்று ISO ஆகும். ( )

17. நாட்டுவதற்கான பயற்றம் வித்தை தாய்த் தாவரங்களிலேயே உலரவைத்து பெற்றுக்கொள்ள முடியும். ( )

18. வெள்ளரி, பீற்றூட் போன்றவற்றை கழுவிய பின் தோலை நீக்குதல் வேண்டும். ( )

19. பொருட்களின் விலையை காட்சிப்படுத்தாமை சந்தை மோசடி ஆகும். ( )

20. மண்ணரிப்பை தடுக்க கிளிசிரீடியா வேலி அமைக்கலாம். ( )

(20 x 2 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி II

முதலாம் வினா உட்பட விரும்பிய மூன்று வினாக்களுக்கு விடை தருக.

(01)
1. முதலாம் தவணையில் நீர் மேற்கொண்ட செயன்முறைச் செயற்பாடு ஒன்றைக் குறிப்பிடுக.?
2. நீர் மேற்கொண்ட செயற்பாட்டுக்கு பயன்படுத்திய பொருட்கள் கருவி உபகரணங்களை தருக?
3. அச் செயற்பாட்டின் போது எதிர் கொண்ட தடைகள் பிரச்சினைகளை தருக?
4. அச் செயற்பாட்டின் போது மேற்கொள்ள உமக்கு உதவி புரிந்தவர்களை தருக?
5. அச் செயற்பாட்டின் மூலம் பெற்றுக்கொண்ட அனுபவங்களை தருக?

(2 + 5 = 10 புள்ளிகள்)

(02)
1. கழிவுப் பொருட்களின் பிரதான இரு வகைகளும் எவை? உதாரணம் தருக?
2. தரை அலங்கரிப்பிற்காகப் பயன்படுத்தப்படும் பிரதான இருகூறுகளும் எவை?
3. பயிர்களுக்கு கூட்டெரு இடுவதன் அனுகூலங்கள் மூன்று தருக?
4. சிதை வடையாத கழிவுப்பொருட்களை முகாமைத்துவம் செய்யும் 3R எண்ணக்கருக்களை தருக?

(2 + 2 + 3 + 3 = 10 புள்ளிகள்)

(03)
1. ஆளி வகைகள் 3 தருக?
2. தடையியின் பயன்பாடு யாது?
3. பின்வரும் இலத்திரனியல் துணைக் கூறுகளின் குறியீடுகளைத் தருக?
   1. ஒலிகாலும் இருவாயி
   2. கொள்ளளவி
   3. மோட்டர்
   4. மின்குமிழ்

(3 + 3 + 4 = 10 புள்ளிகள்)

(04)
1. சமையலறையில் கையுறை பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக?
2. உணவு தயாரிப்பவர் பின்பற்ற வேண்டிய சுகாதாரப் பழக்க வழக்கங்கள் 4 தருக?
3. நிறமாற்றத்தை தவிர்க்க மேற்கொள்ளக்கூடிய முற்பரிகரிப்பு முறைகள் 3 தருக?

(4 + 4 + 2 = 10 புள்ளிகள்)

(05)
1. சந்தை என்றால் என்ன?
2. தரமான பொருளை கொள்வனவு செய்யும் போது அவதானிக்க வேண்டிய விடயங்கள் 4 தருக?
3. சந்தையில் ஏற்படக்கூடிய சந்தை மோசடிகள் 4 தருக?

(2 + 4 + 4 = 10 புள்ளிகள்)



kalvi.lk

# ONLINE CLASSES

## TAMIL AND ENGLISH MEDIUMS

அனைத்து பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்....

GRADE **7**

திறமை வாய்ந்த ஆசிரியர்களினூடான சிறந்த வழிகாட்டலுடன் கூடிய வினைத்திறன் மிக்க நிகழ்நிலை வகுப்புகள்.

FREE **ADMISSION**

**075 287 1457**

| | | |
|---|---|---|
| தமிழ் | வரலாறு | சுகாதாரம் |
| விஞ்ஞானம் | English | புவியியல் |
| கணிதம் | ICT | குடியியல் |

- **Spoken English Classes.**
- **Sinhala Reading and Writing Classes.**
- **Map Marking Classes**

**தினமும் வகுப்பு RECORDING வழங்கப்படும்.**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள் தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும். (தனிப்பாட அனுமதிகளையும் பெற்றுக்கொள்ள முடியும்)



கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.


**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page